DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No. 809/2023

Prosecution PW 5

Deposition of Witness for Defence

Court

| | | |
|---|---|---|
| Name | : | செல்வராஜ் |
| Father's Name | : | பச்சைநாச்சி |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Age | : | |
| Calling | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 15.04.2026.

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் தற்போது புலியூர், செட்டிபாளையத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். என்ன சம்பவம் நடந்தது என்று எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி குவிமுச பிரிவு 161க்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதால் பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.**

**குறுக்கு விசாரணை (அரசு தரப்பில்)**

போலீஸ் விசாரணையில் கடந்த 05.05.2022ம் தேதி காலை 05.00 மணியளவில் புலியூர் பேரூராட்சிக்கு உட்பட்ட செட்டிபாளையத்தில் டாய்லட் செட்டை யாரும் பயன்படுத்தக் கூடாது என்று சொல்லி கடப்பாறையால் குணசேகரன் உடைத்து சேதப்படுத்திக் கொண்டிருந்தார் என்றும், சத்தம் கேட்டு நானும், சாந்தி மற்றும் அவரது கணவர் வந்து குணசேகரனை தடுத்தபோது கையில் வைத்திருந்த கடப்பாறையை காட்டி கொலைமிரட்டல் விடுத்து, தகாத வார்த்தைகளால் திட்டி, அவர் கையில் வைத்திருந்த கடப்பாறையுடன் சென்றுவிட்டார் என்றும், மேற்படி சம்பவம் குறித்து சாந்தி காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்தார் என போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்)**

இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஒம்./-எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**